உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டணத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டும்,

உடற்கூற்றுவண்ணமும்.

இவை

[illegible]

[illegible] பிள்ளையவர்களால்

[illegible]

[illegible] முதலியாரால்

[illegible]

[illegible]

[illegible] அச்சுக்கூடத்திற் பதிப்பி

க்கப்பட்டன.

1892.

ஸ்ரீ

கடவுள் துணை

விளம்பரம்



இதனால் நமது பதிப்புகளைக் கோரும் நேசர்களுக்கு அநேகவந்தனத்துடன் அறிவிப்பதியாதெனில்,

நம் பூர்வ வரகவிகள், வித்வான்கள் செய்துள்ள ஸ்தோத்திரப் பாடல்களையும், இதிகாச புராணங்களையும், காவியங்களையும், நீதிநூல்களையும் முன்னிருந்தபடியே திருத்திச் சுத்தபாடமாக அச்சிட்டுப் பிரசுரஞ் செய்ய வேண்டுமென்பதேயாம்.


இந்நாட்களில் கடைகளில் ஒவ்வொருவரும் தங்களது விலை லாபத்திற்குப் பதிப்பித்து வெளிவரும் அநேக பொருளற்ற பதிப்புகளைப் போலல்லாது செய்யுளையாகத் தோன்றினால் நமது அச்சியந்திரசாலை விருத்தி பொருந்திய பண்டிதர்களின் நோக்கத்தைக் குறித்து விலைமலிவாகக் கொடுக்கும் பொருட்படாப் பிழைகளொன்றில்லா பதிப்புகளை ருசியுள்ளதாகக் கல்விப் பிரியர்கள் கைக்கொள வேண்டுமென்று நம்புகிறோம்.

இதன்றியும், தேவாரம், குசு கூடப் பிரபந்தம் திவாகரம், நிகண்டு, சதகம், மாலை, கலம்பகம் முதலிய நூல்களை இப்பதிப்புபோலவே பிழையறத் திருத்தி விலைக்குறைந்த ...ங்களில் அச்சிட்டு வருகின்றோம்.

இப்படிக்கு,

ஆ. நடராஜமுதலியார்.

Managing Proprietor



கணபதி துணை.

பட்டினத்துப்பிள்ளையார்

திருப்பாடற்றிரட்டு.

முதலாவது

கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.


நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின், மனனே நினைமின் மனனே
* அலகைத் தேரி னலமரு காவின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலை () யோம்பற்க
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
[illegible]

[illegible]

...னை தோன்றின
...து நினைத் திலன்றன

ஓ பற்க-பாதுகாவாதஒழிக





பெற்றவை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
தாம்பினை யனைத்து மனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றிரண் டொழியா துற்றனை யன்றியும்
* புற்புதக் குரம்பைத் துச்சி லொதுக்கிடம்
என்னினைத் தியங்கு மிருவினைக் கூட்டைக்
காலிற்றும் வலிதாக் கருதினை யிதனுள்
பீளையு நீருமப் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமு மிழுங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்
() பட்டைக் குடிலிற் கட்டுடைய யாகும்
உடலுறு வாழ்க்கையை யுண்மையென் றோர்ந்து
கடு [illegible] பெண்ணை [illegible]
வெரிவருகு [illegible]
திருவிலை [illegible]
[illegible]
வரிவாடி [illegible]
ஒருவொரு பல [illegible]
முன்னினைத் [illegible]
அப்பொருந் தாரா [illegible]

---

* புற்புதம் - நீர்க்குமிழி




நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொன் னம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே.

இரண்டாவது


கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுடை யொழுக்
காதலுங் கருத்து மல்லா லின்றிருநாட
பயனுங் கூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடந் தீர்ந்த தமியனை யாண்டு
தங்கோ டிங்கோ டருளிய வையா
இவ்வா கைவிட் டொருங்கு ஞானம
சமமைப் பெறைற் பிறவிலாப் பெட்டகம
வாசி பிந்தக கோணை நுடபுருஞ் சீரா
ணர்ந்தன மறந்து மறந்தன வுணர்ந்து
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன வழுக்க
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவ
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றே
பிறந்தனை பிறந்தனை பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்
தின்றனை யனைத்து மனைத

---

* அலகைத்தேர்-கானல் ()



விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ் சட்டை
ஏமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டு கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மனமாய நடக்கும் வடிவின முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த * பூளை காலைக்
கதிரோ னிட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயிற் கனவிற் கண்டகன் காட்சி
அநித்தமும் பொல்லா மாயக் களங்கம்
அனையு மனையும் பிரானே யனையும்
இனைய வல்லி வாழியென் றேதந்
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருளைநின் னருளிறுங் கழலே.

மூன்றுவது

கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படும் () கடு வெவ்வினையைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடங்கிடுங் கடுங்கொலைக் காலனைக்



* பூளை-பூளைபூ () கடு-விடம்.




காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலுமுடைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியனின் னடைக்கலம்
மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழுக்குறு மனமும்
ஆணவ மலத்துதித் தளைந்தளைந் துளைந்திடு
நிணவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு வினையும்
தவறு மழுக்காறு மிவறும் பொச்சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகாரமுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி * முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடைக்கிய யாக்கையை
உயிரொறுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுகுகுருதியுங் குடிலைச்
செழுப்பொழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை


* முயக்கம் - தழுவுகை.

மூன்றாவது கோயிற்றிருவகவல்.

ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காயக் காற்றெறிந் தலைப்பப்
பெருவழிக் களைபிசை கெடுமரக் கலத்தை
இருவினை வலைக்கொடு மயங்குறு புகலினை
நிலையில்லா துறைந்திட நெகிழ்ந்திடு யாக்கையைப்
பிணிவிளைப் பதிப்பிடான புறப்படும் பொழுதினை
அழுமலர்ப் படலத்துக் கமைக்கின் னுடைகலம்
வெளிப்பிணை யுநீருடிப் பிடித்தென வெறித்தெழுங்
தசைதனை வெளிவிடக் கடவுளின் னுடைக்கலம்
இசையா நாட்டு இறைச்சிய னுடைக்கலம்
துடியாச் செரியாக் குடைக்கு னுடைக்கலம்
மறைவாய் [illegible] அழுக்கு
கரும்பினை மாய உடல்விறு கடலே யுடைக்கலம்
தேவர் முனியாது மெய்யுறக் கொண்டப
() பாசிழைப் பெண்டிர்ப் பின்செருக்கும் பரிவுக்
எம்பெம் மனையின் விளையாடு [illegible]
அம்பலக் [illegible] மே.

---

* புற்கலம் உயிர். () பாசு-பசுமை, இழை-ஆபரணம்.






நான்காவது

கச்சித்திருவகவல்.

திருமால் * பயந்த திசைமுக னமைத்த
வருமொழிப் பிறவியு மானிடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிணைநினைக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடிய
மானுடர்க் கெல்லா மியானெனத் துணைப்பேன
விளிவெளி மாகத் தெளிவுறக் கேண்மின்
முன்றுங் கலனு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்செனப் புரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்பும் தக்கபுன் () குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பியும்
நெடுமுடை நாறுங் கிளர்பொறி யிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்
மலமுஞ் சலமு மலிபுழு நிறையும்
அல்குல வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளர்ந்துமுன் னெழுந்து
நிணந்திரி யிப்பிச் சீப்பாயுஞ் சீறி
உதிரத் திறவு மள்ளுதல் வாங்கி
நகுவார் கிடமாய் நான்று வறளும்
முலையைப் பார்த்து ‡ முளரி மொட்டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன

* பயந்த - ஈன்ற () குறங்கு - தொடை
‡ முளரிமொட்டு - தாமரைமொக்கு



நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முலகிய லியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு முதிர்ந்து மேவிய வாயைத்
* துப்பு முருக்கின் தூய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யொழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையும்
தக்க நல்லோர் பாட்டுடன் முடித் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரள்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரகவாசல்
சோறு மிறைச்சியுந் துறுத்து நாறிய பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொல்லைபெரு வாசல்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்

* துப்பு-பவளம்







நச்சிக் காமுக நாய்தா னென்றும்
இச்சித் திருக்கு மிடைகழி வாசல்
திங்கட் சடையோன் றிருவரு ளில்லோர்
தங்கித் திரியுஞ் * சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்
மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி
மலஞ்சொரிந் திழியும் வாசற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாசல்
இச்சை நீங்க ளினிதெனை வேண்டா
பசகிலை யிடினும் பத்தாக் கிரங்கி
மெச்சிய சிவபத வீடருள் பவனை
முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமுங்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை யிணையடி யிறைஞ்சுமின்
போக மாதயைப் போற்றுத லொழிகிறீர்.

திருச்சிற்றம்பலம்

* சவலை-மயலை




திருவேகம்பமாலை.

* அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிக மில்லந், துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன், மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற், றிறந்தான் பெருமையை யென்சொல்லுவேன் கச்சி யேகம்பனே. (க)

கட்டி யணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன், வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால், கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா, லெட்டி யடிவைப் பரோவிறை வாகச்சி யேகம்பனே. (உ)

கைப்பிடி நாயகன் றூங்கையி லேயவன் கையையெடுத், தப்புறந் தன்னி லசையாமல் முன்வைத் தயல்வளவி, லொப்புடன் சென்று துயினீத்துப் பின்வந் துறங்குவளை, யெப்படி நானம்பு வேனிறை வாகச்சி யேகம்பனே. (ங)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி, நில்லாப் பிழையு நினையாப் பிழையு நின்னஞ்செழுத்தைச், சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு, மெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. (ச)

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளு
மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே. ()

* அற [illegible]

பொல்லா தவனெறி நில்லா தவனைம் புலன்கடமை, வெல்லா தவன்கல்வி கல்லா தவன்மெய் யடியவர்பாற், செல்லா தவனுண்மை சொல்லா தவனின் திருவடிக்கன், பில்லா தவன்மண்ணி லேன்பிறந் தேன்கச்சி யேகம்பனே. (௧௭)


பிறக்கும் பொழுது கொண்டுவந்த தில்லை பிறந்துமண்மேல், இறக்கும் பொழுது கொண்டுபோவ தில்லை யிடைநடுவிற், குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா, திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே. (௧௮)

அன்னவிசாரமதுவே விசாரமதொழிந்தாற், சொன்னவிசாரந்தொலையாவிசாரநற் றோகையரைப், பன்னவிசாரம்பலகால்விசாரமிப் பாவிநெஞ்சுக், கென்னவிசாரம்வைத்தாயிறைவாகச்சியேகம்பனே. (௧௯)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி, நில்லாப் பிழையு நினையாப் பிழையுநின் னஞ்செழுத்தைச், சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையு, மெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே. (௨௦)

மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும், வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந், தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந், தேயுமதே நிட்டை யென்றா னெங்கள் கச்சி யேகம்பனே. (௨௧)

* ...பா-கிழங்கள்.

வரிக்கோல வேல்விழி யாரநு ராக மயக்கிற்
சென்று, சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ்சொ லேனென்
றமி யேனுடல், நரிக்கோ கழுகு பருந்தினுக்கோ
வெய்ய நாய்தனக்கோ, வெரிக்கோ விரையெதுக்
கோவிறை வாகச்சி யேகம்பனே. (கக)

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டி
யென் கண்ணெதிரே, மாதென்று சொல்லி வருமாயை
தன்னை மறலிவிட்ட, தூதென்றெண் ணாமற் சுக
மென்று நாடிய துராப்புத்தியை, யேதென் றெடுத்
துரைப் பேனிறை வாகச்சி யேகம்பனே. (கஉ)

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே. (கந)

சீறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே. ()

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப்
போர்க்களத்தும், * தெருளுடை யோரை முகத்தி
னுந் தேர்ந்து தெளிவதுபோ, லருளுடை யோரைத்
தவத்திற் குணத்தி லருளிலன்பி, லிருளறு சொல்லி
னுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே. (கரு)

பருத்திப் பொதியினைப் போலே வயிறு பருக்
கத்தங்க, டுருத்திக் கறுசுவை போடுகின் றார்துறந்

* தெருள்-தெளிவு.






தோர்தமக்கு, வருந்தி யமுதிட மாட்டா ரவனையிம் மாநிலத்தே, விருந்திக்கொண் டேயிருந் தாயிறை வா கச்சி யேகம்பனே. (௧௬)


பொல்லா விருளகற் றுங்கதிர் கூகைதன் புட் கண்ணினுக், கல்லா யிருந்திடு மாறொக்கு மேயறி வோருளத்தில், வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக் கங்கண்டா, யெல்லாம் விழி மயக் கேயொப்பு மாகச்சி யேகம்பனே. (௧௭)

வாதுக்குச் சண்டைக்குப் போவார்வருவர் வழக்குரைப்பார், தீதுக் குதவியுஞ் செய்திடு வார்தனந் தேடியொன்று, மாதுக் களித்து மயங்கிடு வார்விதி மாளுமட்டு, மேதுக் கிவர்பிறந் தாரிறை வாகச்சி யேகம்பனே. (௧௮)

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்ப ருற்றுப்பெற்ற, தாயாரை வைவர் சதியா யிரஞ்செய் வர் சாத்திரங்க, ளாயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை யண்டினர்க்கொன், றீயா ரிருந்தென்ன போ யென்ன காண்கச்சி யேகம்பனே. (௧௯)

அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பாய், தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சாதகத்தாற், செப்பில பக்குவம் பக்குவ மாயுள்ள சீவனிலு, மிப்படி பேதிப்ப தென்னை பிரான் கச்சி யேகம்பனே. (௨௦)

நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந், தாயார் வயிற்றி னரராய்ப் பிறந்தபின் சம்பன்னராய்க், காயா மரமும் வறளாங் [illegible]முங்கல்

லாவுமென்னே, வியா மலிதனை போற்படைத் தாய்கச்சி யேகம்பனே. (உக)

ஆற்றிற் கரைத்த புளியாக்கி டாமலென் னன்பையெல்லாம், போற்றித் திருவுளம் பற்றுமை யாபுர மூன்றெரித்துக், கூற்றைப் பணிகொளுந் தாளுடையாய்குன்ற வில்லுடையா, யேற்றுக் கொடியுடை யாயிறை வாகச்சி யேகம்பனே. (உஉ)

பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட் டென்னைக், கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப், புண்ணாங் குழியிடைத் தள்ளியென் போதப் பொருள்பறிக்க, வெண்ணா துனைமறந்தேனி றைவாகச்சி யேகம்பனே. (உங)

நாவார வேண்டி யிதஞ்சொல்லு வாருனை நான்பிரிந்தாற், சாவேனென் றேயிருந் தொக்கவுண் பார்கள்சொ லான்னைநன்றா, போய்வாரு மென்று நடுத்தலைக் கேகுட்டும் பூனையருக், கிவார் தலைவித்தி யோவிறை வாகச்சி யேகம்பனே. (உச)

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக் கனவிலுமெய், சொல்லாத பக்கவர்க் கன்னமிடார்குரு சொன்னபடி, நில்லா தறநெறி நினையார்நின் றாளினை விற்சரணா, யில்லா திருந்தவன் னிறந்தேன் புகலக்கச்சி யேகம்பனே. (உரு)

வானமுதத்தின் சுவையறியாதவர் வண்கனியின்
றேனமுதத்தின் சுவைபெண்ணைப்போலத்தனி தனியே
தேனமுதத்தினைத் தெளிவாயஞானஞ்சிறிது மில்லாக்
கூனமுதச்சுவை தன்னல்லவோகச்சியேகம்பனே. (உ௬)




ஊற்றைச் சரீரத்தை யாபாசக் * கொட்டிலை யூன்பொதிந்த, பீற்றற் றுருத்தியைச்சோறிடுந்தோற் பையைப் பேசரிய, காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே, யேற்றுத் திரிந்துவிட் டேனிறை வாகச்சி யேகம்பனே. (௨௭)

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த, பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ, லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற், றெல்லாப் பிழையும் பொறுத் தருள் வாய்கச்சி யேகம்பனே. (௨௮)

() முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி, மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை யோலை விளக்கியிட்டுப், பட்டப் பகலில் வெளிமயக் கேசெய்யும் பாவையர்மே, லிட்டத்தை நீதவிர்ப் பாயிறை வாகச்சி யேகம்பனே. (௨௯)

பிறந்துமண் மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை, மறந்துசிற் றின்பத்தின் மேன்மைய தாகிப்புன் மாதருக்குட், பறந்துழன் றேதடு மாறிப்பொன் றேடியப் பாவையர்க்கீந், திறந்திட வோபணித் தாயிறை வாகச்சி யேகம்பனே. (௩௰)

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரும் புலன்களற்றுப், பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முனற்றுக், காதங் கரணங் களுமற்ற வானந்தக் காட்சியிலே, யேதங் களைந்திருப் பேனிறை வாகச்சி யேகம்பனே. (௩௧)

* கொட்டில்-ஒதுக்கிடம். () முட்டு-குற்றம்.

நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருண் ஞான மிலாப், பொல்லா வெனைக்கொன்று போடும் பொழு தியல் பூசைசெயஞ், சொல்லார்நற் கோயி னியமம் பலவகைத் தோத்திரமு, மெல்லா முடிந்தபின் கொல் லுகண் டாய்கச்சி யேகம்பனே. (கஉ)

சடக்கடத் துக்கிரை தேடிப் பலவுயிர் தன்னைக் கொன்று, விடக்கடித் துக்கொண் டிறுமாந் திருந்து மிகமெலிந்து, படக்கடித் தின்றுழல் வார்க டமைக்க ரம் பற்றிநம, னிடக்கடிக் கும்பொழு தேதுசெய்வார் கச்சி யேகம்பனே. (கங)

நாறுமுடலைநரிபொதிச்சோற்றினைநான்றினமுஞ்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத்தோகையர்தங்
கூறுமலமுமிரத்தமுஞ்சேருங்குழியில்விழாத்
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. (கச)

சொக்கிட் டரமனைப் புக்குட் டிருடிய துட்டர் வந்து, திக்குற்ற மன்னைக் கேட்பது போற்சிவநிந் தைசெய்து, மிக்குக் குருலிங்க சங்கம நிந்திக்கு வி டிச்சிக்கு, மெக்குப் பெருந்தவ மாக வென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே. (கரு)

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்ன மிகக்கொடுக் கப், பொருந்தார் வளம்பெற வாழ்வார்க்கின னுமத்தை நெ ப் போற்றிநிந்த, மருந்தா முலைப்பங்க னொன்றாரப் பாதக ரம்புவியி, விருதாவ தேதுகண் டாயிறை வா கச்சி யேகம்பனே. (கசு)

எல்லா மறிந்து படித்தே யிருந்தெமக் குள்ள படி, வல்லா னறிந்துள னென்றுணரா துமதிமயங்கிச்,

சொல்லான் மலர்த்துறு சூழ்விதி யின்படி துக்கித்துப்
பி, னெல்லாஞ் சிவன்செயலேயென்பர் காண்கச்சியே
கம்பனே. (௩௭)

பொன்னை நினைந்துவெகுவாகத்தேடுவர் பூவையன்று
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர் தாரணியி
லுன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுத்தமரெல்லா
மென்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. ()

கடுஞ்சொல்லின் வம்பரை யீனரைக் * குண்ட
ரைக் காமுகரை, கொடுமை () பவமேசெயு நிர்மூடர்
தம்மைக் குவலயத்து, நெடும்பனை போல வளர்ந்து
நல் லோர்த நெறியறியா, விடும்பரை யேன்வகுத
யிறை வாகச்சி யேகம்பனே. (௩௯)

கொன்றே னநேக முயிரையெல் லாம்பின்பு
கொன்றுகொன்று, தின்றே னதன்றியுந் தீங்குசெய்
தேனது நிற்கவென்றே, நின்றேநின் சந்நிதிக் கேயத
னாற்குற்ற நீபொறுப்பா, யென்றே யுனைநம்பி னேனி
றை வாகச்சி யேகம்பனே. (௪0)

ஊரிருந் தென்ன நல்லோ ரிருந்தென் னுபகார
முள்ள, பேரிருந் தென்பெற்ற தாயிருந் தென்மடப்
பெண்கொடியாள், சீரிருந் தென்னற் சிறப்பிருந்
தென்னவித் தேயத்தினி, லேரிருந் தென்வல்ல வா
யிறை வாகச்சி யேகம்பனே. (௪௧)

வில்லா லடிக்கச் செருப்பா லுதைக்க வெகுண்
டொருவன், கல்லா லெறியப் பிரம்பா லடிக்கக் களி
வண்டுகூர்ந், தல்லார் பொழிற்றில்லை யம்பலவாணர்க்

* குண்டர்-சோரபுத்திரர். () பவம்-பாவம்.

கோரன்னைபிதா, வில்லாத தாலல்ல வோவிறை வா
கச்சி யேகம்பனே. (௪௨)

திருவேகம்ப விருத்தம்.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
என்செய் வேன்கச்சி யேகம்ப நாதனே. (௧)

திருத்தில்லை.

கட்டளைக்கலித்துறை.

* காம்பினை வென்றமென் றோளார்க்கும் பொன்
னுக்குங் காசினிக்குந், தாமபினை யும்பல வாசையும்
விட்டுத் தனித்துச் செம்புலம், போமபினை யன்னைத்
திபளாகக் கூடிப் புரண்டிடவோ? சாமபினங் கத்து
முன்னே யென்செய் வேன்றில்லைச் சங்கரனே. (௧)

சோறிடு நாடு துணிதருங் குப்பை தொண்டன்
பணைக்கண், டேறிடுங் கைக ளிறைவ ரெதிர்கொண் டினியவுரை
பொருளுண், டீறிடு மேனியர் சிற்றம்பலவர் திருத்தங்
கண்டா, லூறிடுங் கண்க ளுருகிடு நெஞ்சமென் னுள்
ளமுமே. (௨)

* காம்பு-மூங்கில்

அழலுக்குள் வெண்ணெயெனவே யுருகிப் பொன்னம்பலத்தார், நிழலுக்கு ணின்றுதவ * முஞற் றாமனிட்டூரமின்னார், குழலுக் கிசைந்த வகை மாலை கொண்டு குற்றேவல்செய்து, விழலுக்கு முத் தலை யிட்டிறைத்தேனென் விதிவசமே. (ங)

ஓடாமற் பாழுக் குழையாம லோர முரைப்பவ ர்பாற், கூடாம னல்லவர் கூட்டம்விடாமல் வெங் கோபநெஞ்சி, னாடாம னன்மை வழுவாம லின்றைக் கு நாளைக்கென்று, தேடாமற் செல்வந் தருவாய் சித ம்பர தேசிகனே. (ச)

பாராமலேற்பவர்க்கில்லையென்னாமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள்வந்தணுகாமன்மனமயர்ந்து
பேராமற்சேவைபிரியாமலன்புபெறாதகல்வி
சேராமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. (ரு)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் () குத் திரங் கோள்களவு, கல்லாமற் † கைதவ ரோடிணங் காமற் கனவிலும்பொய், சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே, செல்லாமற் செல் வந் தருவாய் சிதம்பர தேசிகனே. (சா)

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடி விலொரு, பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண் டு பின்னுமிந்தப், படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ, ரடிசார்ந்து நாமுய்ய வேண் டுமென் றறிவாரில்லையே. (எ)

* உஞற்றுதல்-முயலுதல. () குத்திரம்-வஞ்சனை.

† கைதவர்-வஞ்சகர்.

காலையுபாதிமலஞ்சலமாயன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகு முற்சஞ்சிதமா
மாலையுபாதிநாயில்காமமாமிவைமாற்றிவிட்டே
யாலமுகந்தருளம்பலவாவென்னையாண்டருளே. (௮)

ஆயும் புகழ்த்தில்லை யம்பல வாண ரருகிற்சென் றாற், பாயு மிடபங் கடிக்கு மரவமபின் பற்றிச்சென் றாற், பேயுமணமுமெ பருதலைப் பூதமும் பின்றொ டரும், போமென்செய வாய்மன மேபிணக் காடவர் போமிடமே. (௯)

ஒடியெ டுத்தத ளை..ங் சுற்றி யுலாவிமென் ள, வீடுக டோறும் பலியாங்கு யேவிதி யற்றவர் போ, ரடிமருட்டொணடிங் கம்பலத்தே நிற்கு மாண் டிதன்னைத், தேடுங் கணக்கென்ன காண்சிவ காம சவு ந்தரியே. (௧௦)

ஊட்டுவிப் பானு முறக்குவிப் பானுமிங் கொன் றொடொன்றை, மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினை, காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி, யாட்டுவிப் பானு மொருவனுண் டே தில்லை யம்பலத்தே. (௧௧)

அடியார்க் கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தா ன், முடியாமற் செல்வ வரமபெறலாம் வைய மேழு ளந்த, நெடியோனும வேதனுங் காணாத நிமல னருட், குடிகாணு நாங்க ளவர்காணு மெங்கள் குல தெய்வமே. (௧௨)

தெய்வச் சிதம்பர தேவாவுன் சித்தந் திரும்பி விட்டாற், பொய்வைத்த சொப்பன மாமன்னர் வாழ்

வும் புலியுமெங்கே, மெய்வைத்த செல்வமெங் கே மண்ட லீசர்தம் மேடையெங்கே, கைவைத்த நாடக சாலையெங் கேயிது கண்மயக்கே. (க௩)

உடுப்பானும பாலன முண்பானு முய்வித தொருவர்தம்மைக, கெடுப்பானு மேதென்று கேள்வி செய்வானுங் கெதியடங்கக், கொடுப்பானுந் தேகி யென் றேற்பானு மேறக்க் கொடாமனின்று, தடுப்பானு நீயல்லை யோதில்லை யானந்தத் தாண்டவனே.

வித்தாரம் பேசினுஞ் * சோங்கேறி னுங்கமப மீதிருந்து, தந்தாவென் றேதிப () பவுரிகொண டாடினுந் தமமுன்றம்பி, யொந்தாசை பேசினு மாவ துண் டோதில்லை யுண்ணின்றந்த, கத்தாவின் சொற் படி யல்லாது வேறில்லை கன்மங்களே. (க௫)

பிறவாதிருக்கவரநதரல்வேண்டும்பிறநதுவிட்டா
லிறவாதிருக்கமருநதுண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையமபலவாணரடிககமல
மறவாதிருமனமேயதுகாணன் மருந்துனக்கே. (க௬)

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கர னைப், புவியார்ந் திருக்கின்ற ஞான கரனைப புராதநக னை, யவியா விளக்கைப பொன்னமபலத் தாடியை யைநதெழுத்தாற், செவியாம லேசெவித் தாற்பிறவா முத்தி சித்திக்குமே. (கஎ)

காவின்மறைபபொருளமபலவாணனைநம்பியவர்
பாவிலொருதரஞ்சேவிக்கொணுதிருபபார்க்கருங்கல்

* சோஙகு-மரககலம் () பவுரி-ஓர்கைக்கூத்து.

மேவியெட்டு நவாகைவிலங்கைத் தைப்பாமீண்டுமொரு
காவினிறுத் தாயாகிட்டியுந் தாம்வாதுகட்டுவரே. (க௭)

ஆற்றே னுடம்பையணிந் தாடும்பலவாணர் தமைப்
போற்றுந் தவர் கடையாளமுண்டோவிந்தப்பூதலத்திற்
சோற்றுக்கு மிற்றுச் சுகமற்றுச் சுற்றத்துணியுமற்றே
யேற்றுக்கு மபிச்சை கிடையாமலேக்கற்றிருப்பார்களே.

அத்தமு முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தமு மாயையை வெல்ல மகத்தின் மேசனை யெங்க
ளத்தனை யடியேன்பலத் தாமெமையனை க்காணக் கண்க
ளொத்துக் கோடியுக போதமும் செய்தி ருக்கின்றவே. ()

திருச்செங்காடு.

பொருப்பான மேனியர் செங்காட்டி லாத்தி நிழ
லருகே, யிருப்பார் இருவினை யெப்படி யோவின்ன
மென்னையன்னைக், * கருப்பா சயக்குழிக் கேதள்ளு
மோ யவள் ணியை, இருப்பாத மேருகோதெ
ரியாது விளைசெப்பிலே. (க)

திருவொற்றியூர்.

() ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து, மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான். செய்யுந் திருவொற்றி யூருடையீர் திருநீறுமிட்டுக், கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. (௨)

* கருப்பாசயம்-கருப்பை () ஐ-சிலேத்துமம்.

சுடப்படுவா ரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
றிடப்படுமாமதிற்றென்னொற்றியூரன்றெருப்பரப்பி
னடப்பவாபொற்பதந்தலைமேற்படநன்குருண்டு
கிடப்பதுகாண்மனமேவிதியேட்டைக்கிழிப்பதுவே.

திருவிடைமருதூர்.

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி, யோடே யெடுத்தென்ன வுள்ளன்பி லாதவ ரோங்குவிண்ணோர், நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பா நாரியாபால், வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே. (௧)

தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய, சேயும் பகையுற வோரும் பகையிச்செகமும்பகை, யாயும் பொழுதி னருளுசெவ நீங்கிலிங் காதலினாற், றேயுமெங் கீசமரு தீசர்பொற் பாதஞ் சதந்தரமே. (௨)

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்வீழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே. ()

திருக்காளத்தி.

பத்துப்புகுந்துபிறந்துவளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தும்பவளமும்பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே. (௧)

மந்திக் குருளையொத் தேனில்லை நாயேன் வழ
க்கறிந்துஞ், சிந்திக்குஞ் சிந்தையை யாதென் செய்
வேனெனைத் தீதகற்றிப், புந்திப் பரிவிற் குருளையை
யேந்திய பூசையைப்போ, லெந்தைக் குரியவன்
காணத்த னேகயி லாயத்தனே. (எ)

வருந்தேன்பிறந்துமிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன்புகழ்வாரிடத்தி
லிருந்தேனினியவர்கூட்டம்விடேனியலஞ்செழுந்தா
மருந்தேனருந்துவனின்னருளாற்கயிலாயத்தனே. (அ)

மதுரை.

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை
விட்டுமனந், திடப்படு மோநின் னருளின்றி யேதின
மேயலையக், கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்று
கண் ணீர்ததும்பிப், படபடு மோசொக்க நாதாசவுந்
தர பாண்டியனே. (க)

பொது.

உடைகோ வணமுண் டுறங்கப் புறந்திண்ணை
யுண்டுணவிங், கடைகா யிலையுண் டருந்தத்தண் ணீ
ருண் டருந்துணைக்கே, விடையேறு மீசர் திருநாம
முண்டிந்த மேதினியில், வடகோ டுயர்ந்தென்ன தெ
ன்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே. (க)

வீடுநமக்குத்திருவாலங்காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குசெல்வ
நாடுநமக்குண்டுகேட்டதெல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவேயொருவருமிங்கில்லையே. (உ)

நாடிக்கொண் டீசனை நாட்டமுற்று யிலை நாதா டி, தேடிக்கொண் டாடித் தெளிந்தா யிலைசெக மாயை வந்து, மூடிக்கொண் டோமென்றுங் காமாயுதங்கண் முனிந்த வென்றும், பிடிப்பையோ நெஞ்சமேயுனைப் போலிலைப் பித்தர்களே. (௩)

கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத் தொன் றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொ ன்று பேசப் புலால்கமழு, மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான், செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே. (௪)

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந் துருகப், பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையா, லெண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே, மண்ணுண்டு போகுதையோ கெடு வீரிந்த மானிடமே. (௫)

சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும வேதச் சுருதியிலு, மல்லிலு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோ, ரிலவிலு மன்ப ரிடத்திலு மீச னி ருக்குமிடங், கல்லிலுஞ் செம்பிலு மோவிருப் பா னெங்கள் கண்ணுதலே. (௬)

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற், றினைப்போ தளவுநில் லாதுகண்டாய் சிவன் பாதநினை, நினைப்போரை மேவு நினையாரை நீங் கிந் நெறியினின்று, லுனைப்போ லொருவருண் டோ மன மேயெனக் குற்றவரே. (௭)

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெ டுத்து, முட்டச் சுருட்டியென் மொய்குழ லாள்கையி

ன் முன்கொடுத்துக், கட்டி யிருந்த கனமாயக் காரி தன் காமமெல்லாம், விட்டுப் பிரியவென் றோவிங்ங னே சிவன் மீண்டதுவே. (அ)

சூதுற்ற கொங்கையு மானார்கலவியுஞ் சூழ்பொரு ளும, போதுற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தாற், றீதற்ற மன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ, காதற்ற வூசியைத் தந்துவிட்டா னென்றன் கைதனிலே. (௯)

வாதுற்ற திண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத் தைப், போதுற்றெப் போதும் புகலுநெஞ்சே யிந்தப் பூதலத்திற், ...ற்ற செல்வமென் றேடிப் புதைத்த திரவியமென், காதற்ற வூசியும் வாராதுகாணுங்கடை வழிக்கே. (௧0)

வேதத்தி னுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப், போதித்த வன்மொழி கேட்டிலே யோ செய்த புண்ணியத்தா, லெதித்தன் சந்திரன் போலே வெளிச்சமதாமபொழுது, காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. (௧௧)

மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாச ன்மட்டே, யினமான சுற்ற மயானமட் டேவழிக் கே துதுணை, தினையா மனவெள் ளளவாகினு முன்பு செய்ததவந், தனையாள வென்றும் பரலோகஞ் சித்தி க்குஞ் சத்தியமே. (௧௨)

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம் பொழுக, மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம் மியிரு, கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடுகாடு

மட்டே, பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பா
வமுமே. (௧௩)

சீயுங்குருதிச்செழுநீர்வழும்புஞ்செறிந்தெழுந்து
பாயும்புடவையொன்றில்லாதபோதுபகலிரவா
யீயுமெறும்புப்புகுகின்றயோனிககிரவுபகன்
மாயுமனிதனைமாயாமல்வைக்கமருந்தில்லையே. (௧௪)

சீதப் பனிக்குண்டு சிக்கெனக் கந்தை தினமிரந்
து, நீதுய்க்கச் சோறு மனைதோறு முண்டு நினைவெ
ழுந்தால், வீதிக்கு ணல்ல விலைமாத ருண்டிந்த மேதி
னியி, லேதுக்கு நீசலிந் தாய்மன மேயென்றும் புண்
படவே. (௧௫)

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானு
முண்டு, நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு தித்
தநித்த, யாறுண் டலாவி மயங்குநெஞ் சேமனை நோ
றுஞ்சென்று, சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்
கச் சுகமுமுண்டே. (௧௬)

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லொது
ங்கிவந்தாற், றடுக்கப் பழைய வொருவேட்டி யுண்டு
சகமுழுதும், படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு
முண்டு பசித்துவந்தாற், கொடுக்கச் சிவனுண்டு நெ
ஞ்சே நமக்குக் குறைவில்லையே. (௧௭)

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்
வதெல்லாங், கேடுண் டெனும்படி கேட்டுவிட் டோ
மினிக் கேண்மனமே, யோடுண்டு கந்தையுண் டுள்ளே
யெழுத்தைந்து மோதவுண்டு, தோடுண் டகண்ட
னடியார் நமக்குந் துணையுமுண்டே. (௧௮)

மாத்தான வத்தையு மாயாபுரியின் மயக்கத்தை யு, நீத்தார் தமக்கொரு நிட்டையுண் டோநித்த னன் புகொண்டு, வேர்த்தாற் குளிததுப் பசித்தாற் புசித் து விழித்துயின்று, பார்த்தா லுலகத் தவர்போ லிருப் பர் பற்றற்றவரே. (௧௯)

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லா, மன்றென் றிருபசித் தோர்முகம் பா ர்நல் லறமுநட்பு, நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி, யென்றென் றிருமனமே யுனக் கேவுப தேசமிதே. (௨௦)

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்பு பொய்ம, லாட்டமென் றேயிரு பொல்லா வுடலை யட ர்ந்தசந்தைக், கூட்டமென் றேயிரு சுற்றத்தை வாழ் வைக் குடங்கவிழ்நீ, ரோட்டமென் றேயிரு நெஞ் சே யுனக்குப தேசமிதே. (௨௧)

என்செய லாவ தியாதொன்று மில்லை யினித் தெய்வமே, யுன்செய லேயென் றுணரப்பெற் றேனி ந்த வூனெடுத்த, பின்செய்த தீவினை யாதொன்று மில் லைப் பிறப்பதற்கு, முன்செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே. (௨௨)

திருவேட மாகித் தெருவிற் பயின்றெனைத் தே டிவந்து, பரிவாகப் பிச்சை பகருமென் றுனைப் பதம் பணிந்தேன், கருவாகு மேதக் கடற்கரை மேவக் கரு துமென்னை, யுருவாக்கிக் கொள்ள வல்லோவிங் ஙனே சிவ னுற்றதுவே. (௨௩)

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணரு டன், கிட்டே னவருரை கேட்டிரேன்மெய் கெடா

தனிலே, தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்றொல்லை நான்மறைக்கு, மெட்டே னெனும்பர மென்னிடத் தேவந்திங் கெய்தியதே. (௨௪)

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தைகளைந்தும், விட்டேறிப்போன வெளிதனி லேவியப் பொன்றுகண்டேன், வட்டாகிச் செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க, வெட்டாத பேரின்ப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. (௨௫)

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கெனு மிந்தமண்ணுஞ், சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க, நரியெனக் கென்னும் புன்னாயெனக் கென்னுமிந் நாறுடலைப், பிரியமுடன் வளர்த்தேனித னாலென்ன பேறெனக்கே. (௨௬)

அண்ணறன் வீதி யரசிருப் பாகு மணிபடையோர், நண்ணொரு நாலொன்ப தாமவ ரேவலு நண்ணுமிவ்வூர், துண்ணென் பசிக்கு மடைப்பள்ளி யான சுகமுமெல்லா, மெண்ணிலி கால மவமே விடுத்தன மெண்ணரிதே. (௨௭)

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார், பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார், கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தா, ருன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே. (௨௮)

கறையற்ற பல்லுங் கரித்துணி யாடையுங் கள்ளமின்றிப், பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாத வூணும் புறந்திண்ணையுந், தறையிற் கிடப்பு மிரந்து

ண்ணு மோடுஞ் சகமறியக், குறைவற்ற செல்வமெ
ன் றேகோல மாமறை கூப்பிடுமே. (உகூ)

எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்கு
மொன்றாய், முட்டித் ததும்பி முளைத்தெழுஞ் சோ
தியை மூடரெல்லாங், கட்டிச் சுருட்டித் தங் கக்கத்
திலே வைப்பர் கருத்திலே வையார், பட்டப் பகலை யிர
வென்று கூறிடும் பாதகரே. (௩0)

வாய்நாறுமூழ்மயிர்ச்சிக்குநாறிடுமையிடுங்கண்
பீநாறுமங்கம்பிணவெடிநாறும்பெருங்குழிவாய்
சீநாறும்யோனிபழுநாறுமிந்தியச்சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க்கோவிங்ஙனேமனம்பற்றியதே.

உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண்டு
ரைப்படியே, செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு
தெருக்குப்பையிற், றரிக்கக் கரித்துணி யாடையு
முண்டெந்தச் சாதியிலு, மிரக்கத் துணிந்துகொண்
டேன்குறை யேது மெனக்கில்லையே. (௩௨)

எதப்பட் டாயினி மேற்படும் பாட்டையி
தென்றறிந்து, போதப்பட் டாயில்லை நல்லோ ரிடஞ்
சென்று புல்லறிவால், வாதைப்பட் டாய்மட மாதர்
கலவி மயக்கத்திலே, பேதைப்பட் டாய்நெஞ்ச மேயு
னைப் போலில்லை பித்தருமே. (௩௩)

சுரப்பற்றுவல்வினைசுற்றமுமற்றுத்தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர்கையிணக்கற்றுக்கவலையற்று
வரப்பற்றுநாதனைவாயாரவாழ்த்திமனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோபரமாபரமானந்தமே. (௩௪)

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லா, நாய்போ லருந்தி நரிபோ லுழன்று நன் மங்கையரைத், தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மைசொல்லிச், சேய்போ லிருப்பர் கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே. (௩௫)

விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீண னிட்ட, முடக்கே புழுவந் துறையிட மேநல முற்று மிளாச், சடக்கே கருவி தளர்ந்துவிட் டாற்பெற்ற தாயுந்தொடாத், தொடக்கே யுனைச்சுமந் தேனின்னி னேது சுகமெனக்கே (௩௬)

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை, தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த, பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ, னெழுதாப படிவருமோ சலியா திரான் னேழைநெஞ்சே. (௩௭)

ஊரீருமக்கோருபதேசங்கேளுமுடம்படங்கப்
போரீரமணைக்கழுவேற்றுநீறதைப்புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைநீங்கிச்சகநனைக்க
வேரீருமக்கவர்தாமேதருவரிணையடியே. (௩௮)

நீற்றைப்புனைந்தென்னநீராழம்போயென்னநீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயிலைமாமறைநூ
லேற்றிக்கிடக்குமெழுகோடிமந்திரமென்னகண்டா
யாற்றிற்கிடந்துந்துறையறியாமலலைகின்றதே. (௩௯)

ஓங்காரமாய்நின்றவத்துவிலேயொருவித்துவந்து
பாங்காய்முளைத்தபயனறிந்தாற்பதினாலுலகு
நீங்காமனீக்கமிறையாநிறைந்துநிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே. ()

விதியார்படைப்புமரியாரளிப்பும்வியன்கயிலைப்
பதியார்தொடைப்புநம்பாலணுகாதுபரானந்தமே
கதியாகக்கொண்டுமற்றெல்லாந்துயிலிற்கனவெனநீ
மதியாதிருமனமேயிதுகாணன்மருந்துனக்கே. (சக)

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல, வாய்க்குண்டு மந்திர பஞ்சாட்சரமதி யாமல்வரும, பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி, நோய்க்குண்டு தேசிகன றன்னருணோக்கங்க ணோக்குதற்கே. (சஉ)

நேமங்கணிட்டைகள்வேதங்களாகமநீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ்சந்திசெபமந்த்ரயோகநிலை
நாமங்கள்சந்தனம்வெண்ணீறுபூசிநலமுடனே
சாமங்கடோறுமிவாசெய்யும்பூசைகள்சாப்பட்டையே. ()

நானெத் தனைபுத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே, யேனிப்படிக்கெட்டுழலுகின்றாயினி யேதுமிலா, வானத்தின் மீறுகருவன்றாண்டி விட்ட வகையதுபோற், போனதை மீள நினைக்கின் றனை யென்ன புத்தியிதே. (சச)

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனாம், வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளாங்கள்செய்து, விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப், புன்செய்க் களைபறித்தேன் வளர்த்தேன்சிவ போகத்தையே. (சரு)

தாயாருஞ் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடநா, ணீயாரு நானாரெனப்பகர்வாரந்த நேரத்திலே, நோயாரும்வந்து குடிகொள்வ ரோற்கொண்ட

நோயுமொரு, பாயாரு நீயுமல் லாற்பின்னை யேது நட் பாமுடலே. (௪௯)

ஆயும் பொழுது மயிர்க்கால்க டோறு மருங்கிருமி, தோயுமலக் குட்டை யாகிய காயத்தைச் சுட்டுவிட்டாற், பேயு நடன மிடுங்கட மாமென்று பேசுவதை, நீயுமறிந் திலையோ பொருட்டட நினைத்தனையே.

பூணுமபணிக்கலைபொன்னுக்குத்தானல்லபூமி தனைக்
காணுமபடிக்கல்லமங்கையர்க்கலலநறகாட்சிக்கலல
சேணுங்கடந்தசிவனடிக்கல்லவெண் சிந்தைகெட்டுச்
சாணுமவளாகககயடியேன்படுந்துயா சற்றல்லவே. ()

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொருவாக்
கெட்டாதபுட்பமிறையாதநீர்த்தமினிமுடிந்து
கட்டாதலிங்கங்கருதாதநெஞ்சங்கருத்தினுளளே
முட்டாதபூசையன்றோகுருநாதன்மொழிந்ததுவே. ()

எருமுட்டை பிட்கி றுநிரந்திடுஞ் சொல்லுக் கெவரழுவார், கருமுட்டை புக்குக் கழலகன் றுய்கனதுக்கமதாய்ப, பெருமுட்டுப் பட்டவர் போலழும்பேதையிா பேதறுகிற், சொருமுடடும் விட்டு மறுமைமெனறைக்கு மோதுமினே. (௫௦)

மையாடு கண்ணியு மைந்தரும வாழ்வு மனையுஞ் செந்தீ, யையாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே, மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும், பொய்யாயப் பழங்கதை யாய்க்கனவாய்மெல்லப போனதுவே. (௫௧)

ஆயாய்பலகலையாய்ந்திடுந்தூயவருந்தவர்பாற்
போயாகிலுமுண்மையைத்தெரிந்தாயில்லைபூதலத்தில்

வேயார்ந்தசேரளியர்காமவிகாரத்தில்வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின்றனே மனமேயென்னபித்தனகமே.

அடியாருறவுமரன்பூசைநேசமுமன்புமன்றிப்
படிமீதிலவேறுபயனுளதோபங்கயன்வகுத்த
குடியானசுற்றமுந்தாரமும்வாழ்வுங்குயக்கலங்கள்
தடியாலடியுண்டவாறிருக்குமென்றினஞ்சார்ந்திலமே.

ஆங்காரபபொக்கிஷங்கோபக்களஞ்சியமாணவந்தா
னீங்காவரண்மனைபொய்வைத்தகூடம்விண்ணீடிவளர்
தேங்காப்பெருமதிற்காமவிலாசபித்தேசுகங்கந்தல்
பாங்காயுரைபபணிநதெப்படிஞானமபலிப்பதுவே. ()

ஒழியாப் பிறவி யெடுத்தேங்கி யேங்கி யுழன்ற நெஞ்சே, யழியாப பதவிக் கவுடதங் கேட்டி யநாதி யனை, மழுமான கரத்தனை மாலவிடை யானை மனத்தி லுன்னி, விழியாற் புனல்சிந்தி விம்மியழு நன்மை வேண்டுமென்னே. (௩௫)

நாய்க்கொருசூழு நதுங்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யாககுமபாரத்நசத்துவாராதுபோலுடபபு
திக்கிரையாவநல்லோ ரொடுசேரமையைச்செபபுமினே. ()

நச்சிற்றிடக்குவயனநதைத்திரநடைக்கண்கள்ப . . ட
பிச்சிதநிருநக்கொறமேனமைநெஞ்சேயிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடியுன்னறுபுலைபங்காபாதத்திலே
தைச்சக்கிடமனமமயொருகாலுநறைறிலேயே (௩௭)

மாற்றா விழிமையகடந்தேறி வந்தனன் வாழ்கு நுவப, சோற்றுக் பெண்ணைக குடியேற்றிக் கொண்டன்ன குற்றமிலே, போற்றுமும பேதிருந் தானுநற்

பேறிது பொய்யன்றுகா, ஞானு மிந்த வுடம்போ டிருப்ப தருவருப்பே. (௫௮)

சற்றுகிலுந் தன்னைத் தானறி யாய்தனை யாய்ந்த வனை, யுற்றுகிது முறைக் கப்பொருந் தாயுனக் கான நிலே, பற்றுய் குருவைப் பணியாய்பரத்தையர் பாலிற் சென்றெண், பெற்றுய் மடநெஞ்சமே யுனைப்போ லில்லை பித்தனுமே. (௫௯)

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத் தையறப், புளியிட்ட செம்பையும் போற்றுகிலே னு யர் பொன்னெனவே, யொளியிட்ட தாளிரண் டுள் ளேயிருத்துவ துண்மையென்று, வெளியிட் டடைத் து வைத்தே னினிமே லொன்றும் வேண்டிலனே. ()

கல்லா லெறியுண்டுங் காலா லுதையுண்டுங்காண் டையில், வில்லா லடியுண்டு முன்னாள் விடமுண்டு மே லளித்துப், பலலாற் புரமெரி யேகம்பவாணர் பதாம புயத்தின், சொல்லாச் செவியினிற் கேளாதிருந்ததெ ன் றொல்வினையே. (௬௧)

ஒருநான்குசாதிகளுமூவகைத்தேவர்க்கு மும்பருக்குந் திருநாளுநதீர்த்தமுமவேறுளதோவத்திசைமுகனுல் வருநாளிலவந்திடுமெந்தகண்ணாளன்வகுப்பொழியக் குருநாதனுணைகண்டீர்பின்னையேதிகுருவலயதே. ()

விருத்தம்.

பாரோ நீரோ தீயோ வளியோ படர்வானோ
ஆரோ நானென் றுய்வுறு கின்றே னறிவில்லேன்
பாரோ நீரோ தீயோ வளியோ படர்வானோ
ஆரோ நானென் றுய்வுறு கின்ற வதுநீயே. (௬௩)




கருதார புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து. (கக)

சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே - நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண். (கஉ)

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேறியிரு - நாடிநீ
யென்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனு
னுன்னை நினைத்தா லுதை. (கங)



வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை யண்ணலே - யாசைதனைப்
பட்டிருந்த காலமெலாம் போதும் பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல். (கச)

கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதா
மண்டத்தைப் போல வழகியதாந் - தொண்ட
ருடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு. (கரு)

ஓடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன் - கடுவருந்துந்
தேவாதி தேவன் றிருவொற்றியூர்த் தெருவிற்
போவா ரடியிற் பொடி. (கசு)

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாங் கணநாதர் - பூவுலகில்
வீதிசிவ லோக மெனவென்றே மெய்த்தவத்தோ
ரோதுந் திருவொற்றி யூர். (கள)

நச்சரவம் பூண்டானை நன்றாய்த் தொழுவதுவு
மிச்சையிலே தானங் கிருப்பதுவும் - பிச்சைதனை
வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம். (கஅ)

இருக்கு மிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன் - பெருக்க
வழைத்தாலும் போகே னரனேயென் றேக
மிளைத்தாலும் போகே னினி. (௧௯)

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுட னேயுடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தா - பட்டதுபட்
டெந்நேர முஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம். (௨௦)

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே - மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. (௨௧)

ஆரூ ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றூரூர்க டோறு முழலுவீர் - நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர். (௨௨)

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்க
ளெத்தனைபே ரிட்டழைக்க வென்னையே - நித்த
மெனக்குக் களையாற்று யேகம்பா கம்பா
வுனக்குத் திருவிளையாட் டோ. (௨௩)


மண்ணும் தணலாற வானும் புகையாற
வெண்ணரிய தாயு மிளைப்பாறப் - பண்ணுமயன்
கையாறவு மடியேன் காலாறவுங் கண்பா
ராயா திருவையா று (௨௪)

பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சமே
வைப்பிருக்க வாயின் மனையிருக்கச் - சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. (௨௫)

மேலு மிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீல மறிந்திலையே சிந்தையே - கால்கைக்குக்




கொட்டையிட்டுமெத்தையிட்டுக்குத்திமொத்தப்பட்டவுடல்
கட்டையிட்டுச் சுடுவிடக் கண்டு. (உசு)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே - வன்கழுகு
டத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட் டிப்புட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு. (உஎ)

இன்னம் பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை - முன்னம்
மெரித்தகட்டை மீதி லிணைக்கோ வணத்தை
யுரித்துருட்டிப் போட்டது கண்டு (உஅ)

முதற்சங்க மமுதூட்டு மொய்குழலா ராசை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டும் - கடைச்சங்க
மாம்போ ததுவூது மம்மட்டோ விம்மட்டோ
நாமபூமி வாழ்ந்த நலம். (உகூ)

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரை யெண்ணா யறஞ்செய்யாய் - வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு (௩0)

எருவாய்க் கிருவிரற்மே லேறுண் டிருக்கும்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய் திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடுந் தாரைக்கு நீ. (௩க)

மாதா வுடலசலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே - நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா. (௩உ)

அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகா - மெத்தப்
பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி
யிசிக்குதையா காரோணரே (௩௩)

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ - வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப் போமே. (௩௪)

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீர் - எச்சிறனை
யுய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படுமேபின்
சித்த நிராமய மாமே. (௩௫)

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றா ருழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு. (௩௬)

எத்தனைபேர் நட்ட குழி யெத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ் - நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய். (௩௭)

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே - பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான். (௩௮)

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தை பட்டாலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். (௩௯)

மாலைப் பொழுதினறு மஞ்சளரைத் தேகுளித்து
வேலை மினுக்கிட்டு விழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானா லென்செய்வாள் பின். (௪0)

முற்றிற்று



உடற்கூற்று வண்ணம்.

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதந்த—
தந்ததனதான தனதான னு

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து—
பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—
உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்றுநி
றைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து—
மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—
ஒளிநகையூற லிதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—
உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே (வ)

உயர்தருஞான குருவுபதேச முத்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலருமவிளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து—

மயி கோதி யறுபதநீல வெண்டியிர்தண்டொடை
கொ டைபுனைந்து மணிபொனிலங்குபணிகளணிந்து
மாதர்போகநர் கூடிவணங்க—
மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டுமெ
ருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—
மனதுபொருமலைவாயிறகோடி மங்கலசெங்கல
சந்திரற்கொகனை மருவமயங்கி யிரமுழுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—
ஒருமுதலாகி முதற்பொருளாயி ருந்ததனங்களும்
வமயிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் போயுலர்ந்து—
வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து—
செங்கையினிலோர் தடியுமாகியே. (௭)
வருவதுபோவ தொருமுதுகூறு மருந்துமெனும்படி
குந்திநடந்து மனமுமழிந்து சிரவிரிவிர்வந்து
வாயறியாமலெ விடாமல் மொழிந்து—
துயில்வருமோரமி ருமலெமாறாமல் கண்டையுநெஞ்சு
முலர்ந்தவு மிழி றுகி லியிருந்து பசியுமழிந்து
கேனையோபாரகர் போதவிரிகொண்டு—
கலியுகமீதி லிவாரியமொந்த கவாடிவன்பவை
சருசமபிருச கலமெலவுற்ற மசைமெவந்த
காலவழிமே வழி சாதடந்து—
தெளியுமிராம ஓயாதுபோற் ரிநைரயுநெஞ்சமு
லைந்துமருண்டு இடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வெந்தமொகந்து—

மறையவன்வேத னெழுதியவாறு வகுத்துகண்டமு
மென்றுமெரிக்கு இனிமையனகண்டபிணியெனதொந்த
மேதினிவாழ்வுநி லைநினைநின்ற—
கடன்முறைபேசு மெனவுரைதாவு றங்கிவிழுந்துதை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி பொழுகிடவந்து
பூமுநாலுசு வாசமுநின்ற—
நெருக்கடிமாறி வருநேரமே (௩)

வளர்பிறைபோலவெயிறுமுபோல புருவடையுருசிறு
குஞ்சியுமின்றா பனுவமிரண்ட வடிவுமிலங்க
மாமலைபோலயம தூதாகளவந்து—
வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தருமைந்துகு
னிந்தழுதொந்து படியில்விழுந்து மனைவியுமமமா
மாற்றினைபேசுவா ராமைந்து—
பறையவர்சாறு மெறுமயலாரகள் பந்தருமந்திட
நின்றவர்பாரத ரிடமொலவைந்து பறையிடமுந்த
வெளிகாயமவெகளி சாரியுமென்று—
பலவாயுமேவி முதியவர்தாமே [illegible]
வஞ்சிலமொனறு பனிநீக்கொடுதுங்கல [illegible]
பாவநீக்கி [illegible]—
வரிசைகொடாமல் [illegible]
[illegible]
[illegible]—
சிறந்தவுடைமுடி [illegible]
[illegible]
யோகமுடிந்துவிட [illegible]—
நடுபடிபோல யிளிபாருமே. (ச)

